## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## கரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(21.06.2023 முதல் 25.06.2023)

அறிக்கைஎண்: 49/2023 தேதி: 20.06.2023

### கரூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33 - 40 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 - 29 °செ ஆகவும் பதிவானது.

### கரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (21.06.2023 முதல் 25.06.2023).

| கடந்தவாரவானிலை (16.06.2023 முதல் 19.06.2023) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (21.06.2023 முதல் 25.06.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 16/06 | நாள்-2 17/06 | நாள்-3 18/06 | நாள்-4 19/06 | தேதி | நாள்-1 21/06 | நாள்-2 22/06 | நாள்-3 23/06 | நாள்-4 24/06 | நாள்-5 25/06 |
| 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 6 | 4 | 10 | 8 | 3 |
| 39 | 40 | 37 | 33 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 37 | 36 | 36 | 35 | 35 |
| 29 | 29 | 29 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 27 | 26 | 26 | 25 | 25 |
| 3 | 7 | 8 | 7 | மேகமூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 59-29 | 59-49 | 67-75 | 82-52 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80-70 | 70-40 | 70-40 | 70-40 | 70-40 |
| 25 | 22 | 16 | 12 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 12 | 12 | 10 | 10 | 14 |
| மேற்கு தென் மேற்கு | மேற்கு | கிழக்கு | மேற்கு வட மேற்கு | காற்றின் திசை | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு |

### கரூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெருபாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 21.06.2023 முதல் 25.06.2023 ஆகிய தினங்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35 – 37 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25 - 27 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 - 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 - 70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 - 14 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | மழை எதிர்பார்க்கப்படுவதால் பூச்சி மருந்து தெளிப்பதை தள்ளிப்போடவும். |
| நெல் | நடவு வயல் | மழை நின்ற பின் பயிர் நடவு செய்த 3 முதல் 5 நாட்களுக்குள் களை முளைப்பதற்கு முன் களைக்கொல்லிகளான பூட்டாகுளோர் 50 இ.சி 1.0 லிட்டர் (அ) அனிலோபாஸ் 30 இ.சி 500 மி லி (1 ஏக்கர்) இவைகளில் ஏதாவது ஒன்றை 20 கிலோ மணலுடன் கலந்து சீராக தூவ வேண்டும். |
| நெல் | நடவு வயல் | தற்போது நிலவக் கூடிய வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைசிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த மழை நின்ற பின் டைக்கோபால் 2.5 மி.லி. / லிட்டர் அல்லதுபெனாஜாகுயின் 10 இ.சி 2 மிலி / லிட்டர் என்ற அளவில் 200லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்கவும். |
| பருத்தி | வளர்ச்சி பருவம் | தற்போது நிலவக் கூடிய வானிலையின் காரணமாக பருத்தியில் மாவு பூச்சியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த மழை நின்ற பின் டைமித்தோயட் 30 EC அல்லது புரோப்பனோபாஸ் 2 மி.லி/ லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். வேப்பெண்ணை 2 சதம் அல்லது வேப்பங்கொட்டை கரைசல் 5 சதம் என்ற அளவில் தேவையான அளவு ஒட்டும் திரவம் கலந்து தெளிக்கவும் |
| வாழை | | வாழை மரங்கள் காற்று மற்றும் மழையால் சாயாமல் இருக்க, வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| கால்நடைகளுக்கு | மாடு | பருவ மழை தொடங்குவதற்க்கு முன்னர் கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி அளிப்பதனை உறுதி செய்து கொள்ளவும் |

## குறுஞ்செய்தி

தற்போது நிலவக் கூடிய வானிலையின் காரணமாக பருத்தியில் மாவு பூச்சியின் தாக்குதல் தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த டைமித்தோயட் 30 EC அல்லது புரோப்பனோபாஸ் 2 மி.லி/ லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும்.

**இயக்குநர்**